**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 379** **நாள்: 11.08.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் இன்று (11.08.2026) நடைபெற்ற வெறிநாய்க்கடிநோய்த் தடுப்பூசி (Anti Rabies Vaccination) மற்றும் அக, புற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து செலுத்தும் மாபெரும் அளவிலான முகாமில் 1094 தெருநாய்களுக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது**

பெருநகர சென்னை மாநகராட்சியின் 2026-2027 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை, அறிவிப்பின்படி வெறிநாய்க்கடி நோய் பாதிப்பிலிருந்து பொது மக்களை காத்திடவும், வெறிநாய்க்கடி நோய் இல்லா சென்னை மாநகரை உருவாக்கிடவும் அனைத்து தெரு நாய்களுக்கும் வெறிநாய்க்கடிநோய்த் தடுப்பூசி (Anti Rabies Vaccination) மற்றும் அகப்புற ஒட்டுண்ணி மருந்து செலுத்தும் மாபெரும் அளவிலான முகாம் (Mass Anti Rabies Vaccination and Endectoparasiticidal camp) இன்று (11.08.2026) இணை ஆணையர் (சுகாதாரம்), மற்றும் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களால் தொடங்கப்பட்டது.

இம்முகாமின் போது திருவொற்றியூர் மண்டலத்தில் கோட்டம் -1 மற்றும் 2, மணலி மண்டலத்தில் கோட்டம் 15, தண்டையார்பேட்டை மண்டலத்தில் கோட்டம் -34ல் உள்ள அனைத்து தெருக்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் உள்ள தெருநாய்களுக்கும் வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி மற்றும் அகபுற ஒட்டுண்ணி நீக்கும் மருந்து சுமார் 1094 தெருநாய்களுக்கு செலுத்தப்பட்டது.

ஒவ்வொரு மண்டலத்திலும் தலா 10 குழுக்களை பயன்படுத்தி ஒரே சமயத்தில் 3 மண்டலங்களில் இந்த சிறப்பு முகாம் நடத்தப்பட்டுள்ளது.

மேலும் இச்சிறப்பு முகாம் திருவொற்றியூர் மண்டலத்தில் 13 நாட்களும் மணலி மண்டலத்தில் 8 நாட்களும் மற்றும் தண்டையார்பேட்டை மண்டலத்தில் 13 நாட்களும் நடத்தப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அனைத்து மண்டலங்களிலும் இம்முகாம் நடத்தப்பட்டு 75 வேலை நாட்களுக்குள் சுமார் 2,00,000 நாய்களுக்கு ரேபிஸ் நோய் தடுப்பூசியும் மற்றும் அகப்புற ஒட்டுண்ணி நீக்கும் ஊசியும் (Anti Rabies Vaccination and Endectoparasiticidal) அளிக்கப்படவுள்ளது.

இந்த சிறப்பு முகாம்கள் மூலம் "வெறிநாய்க்கடிநோய் இல்லாசென்னை" (Rabies Free Chennai) என்ற இலக்கை அடைவதற்கு பொது மக்களும், செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களும் மற்றும் விலங்கு நல ஆர்வலர்களும் ஒத்துழைப்பு வழங்கிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**